# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்

மெட்ரோபாலிட்டன் அலுவலகம், சினாட் செக்ரடேரியட், செயின்ட் தாமஸ் கம்யுனிட்டி, திருவல்லா, கேரளா, இந்தியா.

# மேய்ப்பனின் கடிதம்

**மார்ச்/ ஏப்ரல் 2024**

பிதா, குமாரன் பரிசுத்த ஆவியாவரின் நாமத்திற்கு மகிமை உண்டாவதாக.

அனைத்து ஆர்ச் பேராயர்கள், பிஷப்கள், குருமார்கள் மற்றும் டீக்கன்கள், இவாஞ்சிலிஸ்ட் மற்றும் சிஸ்டர்ஸ் ஆப் கம்பேஷன் உலகெங்கிலும் உள்ள நம் விசுவாச மக்கள் யாவருக்கும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஆசீர்வாதங்களும் நன்மைகளும் உண்டாவதாக. ஆமென்!

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே**,

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்; மெய்யாகவே அவர் உயிர்த்தெழுந்தார்!

ஒரு திருச்சபையாக, நாம் பெரிய தவக்காலம் மற்றும் ஈஸ்டர் பண்டிகையின் பருவத்தை நிறைவு செய்திருக்கிறோம், கிறிஸ்துவுடன் நெருக்கமாக நடக்கவும் வளரவும் இது நம் அனைவருக்கும் ஒரு அற்புதமான அனுபவமாக இருந்தது என்று நம்புகிறேன். மனந்திரும்புதலின் ஆவியும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அறிவிக்கும் மகிழ்ச்சியும் எப்போதும் நம் வாழ்வின் ஒரு பகுதியாக இருக்கட்டும்!

பூமியில் நாம் இருக்கும் காலத்தில், நாம் கிறிஸ்துவைப் போல மாறுவதற்கான பயணத்தைத் தொடங்குகிறோம் என்பதை தயவுகூர்ந்து நினைவில் கொள்ளுங்கள். திருச்சபையின் மூலமாகவே நாம் ஒரு பரிசுத்த வாழ்க்கையைக் காண்கிறோம், மேலும் திருச்சபை நாட்காட்டியையும், திருச்சபையின் விசுவாசம் மற்றும் பரிசுத்த பாரம்பரியங்களையும் (நடைமுறைகள்) கடைப்பிடிப்பதில் நாம் ஒழுக்கமாகவும் உண்மையுள்ளவர்களாகவும் இருப்பதால் இது நமது வாழ்க்கை முறையாக மாறுகிறது.

நமது வீடுகள் 'சிறிய சபைகள்' என்று அழைக்கப்படுகின்றன, ஏனென்றால் வீட்டில்தான் நமது விசுவாசம் உண்மையாக கடைப்பிடிக்கப்பட்டு அடுத்த

விசுவாசத்தை நாம் எவ்வாறு நம் பிள்ளைகளுக்கும், நமது பேரப்பிள்ளைகளுக்கும், நமது அண்டை வீட்டாருக்கும் கொண்டு சேர்ப்பது? இதைச் செய்வதற்கான ஒரு அருமையான வழியைப் பற்றி நான் உங்களுக்கு சொல்கிறேன். நமது திருச்சபை சமீபத்தில் 'குடும்ப ஜெப ஆராதனை வழிகாட்டி' என்கிற சிறிய புத்தக கையேட்டை வெளியிட்டுள்ளது. என்ன ஜெபிக்க வேண்டும், எப்படி ஒரு குடும்பமாக சேர்ந்து ஜெபிக்க வேண்டும் என்பதை அது நடைமுறையில் நமக்குச் சொல்கிறது. ஜெப பலிபீடத்தை அமைப்பதற்கான நடைமுறை வழிகாட்டுதல்களையும் இது நமக்குத கற்றுத்தருகிறது. இது எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டிருக்கி கிறது, நீங்கள் அனைவரும் இதன் பிரதியைப் பெற்றுக்கொள்ள உங்கள் குருவானவர் உங்களுக்கு உதவுவார். திருச்சபை நமக்குக் காட்டும் மாதிரியில் நீங்கள் ஜெபிப்பதைப் பழக்கப்படுத்தும்போது, தேவன் உங்கள் ஜெபங்களுக்கு பதிலளிப்பது மட்டுமல்லாமல், உங்கள் குடும்பத்தை உங்கள் சுற்றுப்புறத்தில் உள்ள மற்ற குடும்பங்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றுவார்.

அடுத்த தலைமுறைக்கு விசுவாசத்தை கொண்டுச் சேர்ப்பதர்க்கு மற்றொரு சிறந்த வாய்ப்பு என்னவெனில், உலகெங்கிலும் உள்ள நமது திருச்சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'குழந்தைகள் தின முகாம்' விடுமுறை வேதாகம பள்ளி ஆகும். உங்கள் பேராயத்திலிருந்து தேவையான அனைத்து வழிகாட்டுதல்களையும் நீங்கள் பெற்றிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். உங்கள் திருச்சபையின் குழந்தைகளுக்கு மறக்கமுடியாத மற்றும் சந்தோஷமான அனுபவத்தை உருவாக்குமாறு உங்கள் அனைவரையும் அறிவுறுத்துகிறேன். மற்ற குழந்தைகளையும் அழைக்க மறக்காதீர்கள், ஏனென்றால் இந்த பாடங்கள் நம் பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்போது நேர்மறையான ஒழுக்கங்களை வளர்த்துக்கொள்ள உதவுகிறது.

வாலிபர்கள் நமது திருச்சபை மற்றும் நமது நாட்டின் எதிர்காலம். விசுவாசத்திலும் தேவனுடைய வழிகளிலும் வலுவான அஸ்திபாரத்துடன் வளர நமது வாலிபர்களை வழிநடத்துவதன் மூலம் மட்டுமே, அவர்கள் திருச்சபைக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள், அவர்கள் இருக்கும் இடத்திலேயே கிறிஸ்துவையும் அவரது திருச்சபையையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள், பரிசுத்த திருச்சபைக்கு சேவை செய்ய தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்க தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்காக சில சுவாரஸ்யமான செய்திகள் என்னிடம் உள்ளன! நமது திருச்சபையின் பிலிவர்ஸ் யூத் டிப்பார்ட்மெண்ட், வரும் அக்டோபர் 9 - 13, 2024 ஆகிய நாட்களில் பரிசுத்த சினாட் தலைமையகத்தில் ஒரு பெரிய வாலிபர் மாநாட்டை ஏற்பாடு செய்ய திட்டமிட்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள நமது திருச்சபைகளின் பிரதிநிதிகளுடன், இது அவர்களின் வாழ்க்கையில் ஐக்கியம், ஊக்கம் மற்றும் புதுப்பித்தலின் அற்புதமான நேரமாக இருக்கும். இதற்காக தவறாமல் ஜெபியுங்கள், இந்த கூட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கப்போகும் வாலிபர்களுக்காக ஜெபியுங்கள்.

என் அன்பான விசுவாசிகளே, திருச்சபைக்கு நீங்கள் விசுவாசமுள்ளவர்களாக இருப்பதற்காகவும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவைப் போல ஆக வேண்டும் என்ற உங்கள் தாகத்தையும் நான் நினைத்து உங்களை குறித்து மிகவும் பெருமைப்படுகிறேன்

நம் அனைவர் மீதும் நான் வைத்திருக்கும் மிகப்பெரிய வாஞ்சை என்னவென்றால், மற்றவர்கள் மீதான நமது அன்பால் நாம் அறியப்பட வேண்டும் என்பதை.

✠பரிசுத்த திரியேக தேவன் தம்முடைய இரக்கத்தினால் தொடர்ந்து நம்மை வழிநடத்துவாராக.

**கிறிஸ்துவில் உங்கள் ஆவிக்குரிய தந்தை,**

BELIEVERS EASTERN CHURCH PUTHUTHOTTAM KEELPADAPPAI PADAPPAI-601301.TAMILNADU

**தேதி: 22 ஏப்ரல் 2024**

**இடம்: பரிசுத்த சினாட்**

**கனத்திற்குரிய அத்தனேசியஸ் யோஹான் I மெட்ரோபொலிட்டன்.**